# “மெய்யாகவே நீங்கள் குணமடைய விரும்புகிறீர்களா?” [யோவான் 5:1–16]

*யோவான் 5ம் அதிகாரத்தில் இயேசு, வினோதமான ஒரு கேள்வியைக் கேட்டார். அவர், வியாதியாயிருந்த ஒரு மனிதனிடம் சென்று, “சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார்” (வ. 6ஆ). வசனம் 5ல் இம்மனிதன் முப்பத்தெட்டு வருஷம் வியாதியாயிருந்தானென்று குறிப்பிட்டுள்ளது - இம்மனிதனைப் பார்த்து அவன் மெய்யாகவே குணப்பட விரும்புகிறானா? என்று இயேசு கேட்டார்!*

*முதல் பார்வையில் இக்கேள்வி, இன்றைய நாட்களில் பின்வரும் சூழ்நிலைகளில் கேட்கப்படும் இரண்டு கேள்விகளோடு சமமானதாய்க் காணப்படலாம்; ஒரு மோசமான விபத்தைக் கண்ட மனிதன் ஒருவன், முழுவதும் சீர் குலைந்த அந்த காரினிடத்தில் வந்து, உள்ளே பார்க்கிறான். அங்கு மிக மோசமான நிலையில், உடல் உறுப்புகள் பல சிதைந்த நிலையில் உள்ள மனிதரைப் பார்த்து, “நன்றாயிருக்கிறீர்களா?” என்று கேட்டால் எப்படி இருக்கும்! மேலும், ஒரு பெண் மருத்துவமனை சென்று ஒரு வார்டுக்குள் நுழைந்து பார்க்கிறாள். அவளுடைய தோழிக்கு தலை முதல் கால்வரை கட்டுப் போட்டு முகம் வலியால் துடித்துக் கொண்டிருக்கிறது. அப்போது அநேக குழாய்களும், கம்பிகளும் கொண்டு அங்கிருந்த அநேக இயந்திரங்களுடன் அவள் உடல் இணைத்து வைக்கப்பட்டிருந்தது. இவள் அதைப் பார்த்தபின்னும், “உனக்கு வலிக்கிறதா?” என்று கேட்டால் எப்படியிருக்கும்?*

இது இன்னும் சற்று நல்ல முறையில் விளக்கப்பட வேண்டு மென்றால்; ஒரு வேளை நீங்கள் எப்போதும் சற்று உடல் நலம் குன்றியவராயிருந்து, யாரேனும் ஒருவர் உங்களிடம் "நீங்கள் நலம் பெற விரும்புகிறீர்களா?" என்று கேட்டாலோ, அல்லது உங்களுடன் ஒத்துப் போகாத ஒரு நபரைப் பற்றி ஒருவர், "அந்த நபருடன் சமாதானமாயிருக்க விரும்புகிறீர்களா?" என்று கேட் டாலோ, அல்லது, உங்கள் திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை சரியாக அமையாத பட்சத்தில், "நீங்கள் நல்ல திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை அமைவதை விரும்புகிறீர்களா?" என்று ஒருவர் கேட்டாலோ, அல்லது, நீங்கள் குற்றவுணர்வால் வாதிக் கப்படும் போது, "நீங்கள் இந்தக் குற்ற உணர்விலிருந்து விடுபட விரும்புகிறீர்களா?" என்று கேட்டாலோ எப்படியிருக்கும்.

அநேகமாய், இவ்வித கேள்விகளுக்கு உங்கள் முதல் பதில் செய்கை, "என்ன இது வினோதமான கேள்வி! நான் நல மடையவே விரும்புகிறேன் (அல்லது ஜனங்களுடன் மனம் பொருந்தியிருக்க, அல்லது நல்ல திருமணம் மற்றும் குடும்பத் தைப் பெற அல்லது குற்ற உணர்விலிருந்து விடுபட விரும்பு கிறேன்). இதை நீங்கள் கேட்பது எவ்வளவு பொருத்தமற்ற தாயுள்ளது!" என்றே இருக்கும். நாம் எல்லாருமே இவற்றை விரும்புகிறோம் அல்லவா?

யோவான் 5:1-16 ஐ கற்கும் இவ்வேளையில் இந்தக் கேள்வி களை உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

இயேசு தமது கலிலேய ஊழியத்தைத் தொடங்கியிருந்தார். வியாதிப்பட்டவர்களைக் குணமாக்குவது இவ்வூழியத்தின் ஒரு அம்சமாயிருந்தது. இயேசு ஜனங்களுக்குப் போதித்து, குண மாக்கிய போது இரண்டு விஷயங்கள் நடந்தன: (1) கூட்டம் பெருக ஆரம்பித்தது (2) எதிர்ப்பும் வளர ஆரம்பித்தது. இந்தப் பாடத்தில், குணமாக்கப்பட்ட ஒரு நபரைப் பற்றியும், எதிர்ப்பு கிளம்பியதைப் பற்றியும் காணவிருக்கிறோம். இச்சம்பவத்தை தொடர்ந்து நாம் பார்க்கையில், இயேசு கேட்ட "(மெய்யா கவே) நீ குணமடைய விரும்புகிறாயா?" என்ற கேள்வியை ஆழமாக ஆராய்ந்து பார்க்கப் போகிறோம்.

# குளத்தருகில் இயேசு ஒரு மனிதனைக் குணப்படுத்தினார்

*பெதஸ்தா குளத்தருகில் இம்மனிதன் குணமானதை நாம் முதலில் பார்க்கலாம். இது ஒரு மும்மடங்கு குணமாக்குதல் என்று நான் உண்மையிலேயே கருதுகிறேன்.*

***சரீரத்தில் குணமடைதல் (யோவான் 5:1-6)***

*"இவைகளுக்குப் பின்பு யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போனார்" (வ. 1) என்று 5ம் அதிகாரம் துவங்குகின்றது. பண்டிகை ஒ ன்று[1] என்று பொதுவாகக் குறிப்பிடுகின்றபடியால், யூதர்கள் அனைவரும் கட்டாயம் இதில் கலந்துகொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்றும், இது ஏதோ ஒரு சிறு பண்டிகை என்றும் தெளிவாகிறது. இந்நாட்களில், சிலர் ஆராதனைக்குப் போக வேண்டிய "அவசியம் ஏற்பட்டால்" மட்டும் போவது போல் இல்லாமல் இயேசு இப்பண்டிகைக்கும் செல்ல விரும்பினார்.*

*"எபிரெய பாஷையில் பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டு வாசலருகே இருக்கிறது. அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு" (வ. 2). வாசல் என்ற வார்த்தை மொழி பெயர்ப்பில் தெளிவாய் புரிய எழுதப்பட்டதாகும். மூல பாஷையில் இதற்கு "பொருள்" என்றே எழுதியுள்ளது. அதாவது "ஆட்டுப்பொருளினருகே"[3] என்றுள்ளது. ஒருவேளை பலி யாடுகள் இந்த வாசல் வழியே கொண்டு வரப்பட்டிருக்கலாம்.*

*இங்கு சொல்லப்பட்ட குளம் இன்றளவும் இருக்கிறது. "பெதஸ்தா" என்றால், "இரக்கத்தின் வீடு" என்று பொருள்படும். குளக்கரையில் ஐந்து மண்டபங்கள் இருந்தன.[4]*

*இதைத் தொடர்ந்து வரும் காட்சி இருதயத்தைக் கிழிப்பதா யுள்ளது: "அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப் புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து" (வ. 3அ). துர்வாடை எங்கும் சூழ்ந்திருக்கும், அந்த சூழ்நிலை மனதிற்கு அயர்வைத் தருவதாயிருக்கும். அந்தக் காட்சிகள், ஒலிகள் மற்றும் வாடைகள் இவை யாவும் வயிற்றைக் குமட்டச் செய்வதாயிருந்தன.*

இவ்விடத்தில் வேதம் (KJV) இவ்வித வார்த்தைகளைத் தருகிறது;

> … தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள், ஏனெனில் சில சமயங்களிலே தேவ தூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கின பின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனா யிருந்தாலும் சொஸ்தமாவான் (வ. 3ஆ-4; KJV).

இந்த விளக்கமானது மூல பாஷையில் காணப்படுவதில்லை யென்றாலும், பழங்காலத்தில் வேதத்தை எழுதியுள்ளவர்கள், கூறிய விளக்கவுரையாக இது வேதத்தில் இடம் பிடித்துள்ளது.[5] பழங்காலத்தில் ஜனங்கள் இவ்விடத்திற்கு வரக் காரணமான ஒரு மூடநம்பிக்கையை இந்த வார்த்தைகள் நமக்குச் சொல் கின்றன (வ. 7 ஐ கவனிக்கவும்). பெதஸ்தா என்று கூறப்படுகிற இந்தக் குளமானது, நிலத்தடியில் இருந்த ஊற்றிலிருந்து தண்ணீர் பெறுவதாய் இருந்தது. அவ்வப்போது இந்த ஊற்றிலிருந்து குமிழ்கள் கிளம்பும், அநேகமாய் இதைத்தான் தூதன் வந்து தண்ணீரைக் கலக்குவதாக ஜனங்கள் குறிப்பிட்டு இருப்பார்கள்.

“முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனு ஷன் அங்கே இருந்தான்” (வ. 5). இவன் தனது வாழ்நாள் முழுவதும் இல்லாவிட்டாலும், பெரும் பகுதியான வருடங்கள் வியாதியாய் இருந்தான் என்றே நாம் உறுதியாய் கூறலாம். 7ம் வசனத்தில் நாம் காண்கின்றபடி அவன் தானாகத் தண்ணீர் அருகே செல்ல முடியாதவனாயிருந்தான். அந்த அளவுக்கு அவன் மிகுந்த பலவீனமாகவோ, ஊனமுற்றவனாகவோ, அல்லது வாதநோய் உள்ளவனாகவோ இருந்திருக்க வேண்டும்.

6ம் வசனத்தில் காட்சி இப்படி அமைந்துள்ளது; படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதியஸ்த னென்று அறிந்து, அவனை நோக்கி: “சொஸ்தமாக வேண்டு மென்று விரும்புகிறாயா” என்று கேட்டார். வியாதிஸ்தர்கள் கூடியிருந்த அந்தக் குளத்தின் அருகே, ஒரு நோக்கத்தோடுதான் இயேசு வந்தார். அவர் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்காக வரவில்லையென்பதைத் தெளிவாய் நாம் அறிவோம். சந்தேக மின்றி அவருடைய மனதின் இரக்ககுணமே அவரை அங்கே வரவழைத்திருந்தது.

இயேசு குளத்தினருகே சென்ற போது, அங்கே முப்பத்தெட்டு வருஷமாய் வியாதியாய் இருந்த மனுஷன் கிடப்பதைக் கண்டார். இயேசு இந்த மனிதனைக் குணமாக்க முடிவு செய்தது ஏன்? குளத்தைச் சுற்றியிருந்தவர்களில் இவனை மட்டுமே இயேசு குணமாக்கியிருக்கிறார். அது ஒருவேளை, சந்தேகமின்றி ஒரு நோயாளியாக அவன் இருந்ததாலா? அந்த மனிதன் நம்பிக்கையற்றவனாயும், இயேசு, நம்பிக்கையற்றோரின் நம்பிக்கையாகவும், உதவியற்றோருக்கு உதவுபவராயுமிருந்ததாலா? அவனுக்கு நண்பர்கள் யாரும் இல்லாமல் இருந்ததாலா? (வ. 7)[6] இயேசு, நண்பரற்றோரின் நண்பராயிருந்ததாலா? (ஒரு வேளை) ஏதேனும் ஒரு பொம்மையைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட்ட குழந்தையின் நிலையில் இயேசு இருந்தார். பெரிய, பலமான பொம்மைகளால் ஒதுக்கப்பட்ட, பலமற்ற பொம்மை ஒன்றை குழந்தை தேர்ந்தெடுத்துக் கொண்டது!

காரணம் எதுவாயிருப்பினும், இயேசு அவனை உற்றுப் பார்த்தார்; "அவன் அந்த நோய்வாய்ப்பட்ட நிலையில் நீண்ட நாள் அவதிப்பட்டவன்" (சரியாக முப்பத்தெட்டு ஆண்டுகள்) என்று அறிந்து, ''சொஸ்தமடைய விரும்புகிறாயா'' என்று கேட்டார்.

இக்கேள்வியைக் குறித்து சற்று சிந்திப்போம். இயேசு இப்படிப்பட்ட வினோதமான கேள்வியை ஏன் கேட்க வேண்டும்?

சற்று நிதானமாய் இதை யோசித்துப் பாருங்கள்: முப்பத்தெட்டு வருஷமாய் வியாதிப்பட்டிருப்பது ஒரு கடினமான விஷயம். ஆனால் ஒரு கண்ணோட்டத்தில் இம்மனிதன் அதை சுலபமாக்கியிருந்தான். யாரோ ஒருவர் அவனை நாள்தோறும் குளத்தண்டையில் கொண்டு வந்தனர். எவ்விதப் பொறுப்புமின்றி ஒவ்வொருநாளும் அவன் அங்கேயே கிடந்தான். ஒருவேளை அவன் அங்கே ஏதேனும் பிச்சை மாத்திரமே பெற்றிருக்க வேண்டும். வேறு யாரோ அவனைக் குறித்து முடிவு செய்து, எல்லா வேலைகளையும் செய்து வந்தனர். தலைவிதிப்படி நடக்கட்டும் என்று, தவிர்க்க முடியாத இக்காரியத்தை அவன் ஏற்றுக் கொண்டான். அவனது வாழ்க்கையின் எஞ்சிய

*பகுதி நிர்ணயமானதாயிருந்தது.*

*மறுபுறம் பார்த்தால், அவன் திடீரென குணமடைந்தால் என்ன நடக்கும்? அவன் பிழைப்புக்கென்று ஏதேனும் செய்ய வேண்டிய சுமையுண்டாகும். போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் பலவேலைகளில், திறமையின்றி அவன் நுழைந்து அவதிப்பட வேண்டியிருக்கும். ஏனென்றால் முப்பத்தெட்டு ஆண்டுகளாக அவன் ஒன்றுமே செய்யாமல் இருந்திருக்கிறான்! அவனுக்குப் பொறுப்புகளும், பதில் சொல்லும் கடமைகளும் உண்டாயிருக்கக் கூடும். அவன் திறமையுடன் வேலை செய்து, முடிவெடுக்க வேண்டியிருக்கும், அதோடு பரிதாபமாய் தோற்கும் சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.*

*இயேசு, "நீ இதை உண்மையாக விரும்புவது உறுதியா? இதற்குத் தயாராயிருக்கிறாயா?" என்று அவனைப் பார்த்துக் கேட்டார்.*

*வியாதியாயிருப்பது சில மனிதர்களுக்குத் தகுதியானதாய் உள்ளது. "வியாதியை சந்தோஷமாய் அனுபவித்தல்" என்பது சிலரின் பழக்கமாயுள்ளது. சிலர் தங்களுக்கு யாரேனும் ஏதேனும் செய்யக் காத்திருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். சிலர் மற்றவர்களின் கவனத்தைக் கவர வேண்டும் என்றெண்ணுகின்றனர். சிலர் தாங்கள் விரும்பாததைச் செய்யாமல் இருக்க இந்நிலையை ஒரு சாக்காகக் கொள்கின்றனர். சிலர் தங்கள் வியாதியை ஒரு கருவியாக்கி, மற்றவர்களைக் கட்டுப்படுத்துகின்றனர்.*

*முதலில் தோன்றியது போல் இயேசுவின் கேள்வி வினோதமானதாக இப்பொழுது தோன்றவில்லை.*

***மனதில் குணமடைதல் (யோவான் 5:7-13)***

*இந்தக் கேள்வியை இன்னும் ஆழமாகப் பார்ப்போம். இயேசு எல்லா மனிதர்களையும் அறிவார்; அவர்களின் எண்ணங்களையும் அவர் அறிவார் (யோவான் 2:25). எனவே இயேசு பதில்பெறும்படி இக்கேள்வியை கேட்கவில்லை. மாறாக, அம்மனிதன் தன்னையே உணர்ந்து பார்க்கும்படியாகவே[7] இக்கேள்வியைக் கேட்டார். சரீர சுகமளிப்பதில் மட்டும் அக்கறை காண்பிக்காமல், மனதில் உள்ளத்திலும் சுகமளிக்கவே அவர் அக்கறையாயிருந்தார். அம்மனிதன் ஆரோக்கியமான நடக்கைகளை வளர்த்துக் கொள்வதில், இயேசு அக்கறையாயிருந்தார்.*

அம்மனிதன் இயேசுவின் கேள்வியை, ஒரு கடிந்துரையாக நினைத்தான். ஒரு வேளை அவன், "நீ குணமாக விரும்புகிறா யென்றால் ஏன் இன்னும் குணமாகவில்லை? தண்ணீர் கலங்கும் போது முதலாவதாய் அதில் இறங்கும்படி ஏன் முயற்சி செய்யவில்லை?'' என்று இயேசு கேட்பதாக புரிந்திருக்க வேண்டும். அதற்கு வியாதிஸ்தன்: ''ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டு போய் விடுவதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான்" என்றான் (வ. 7).[8]

அந்தக் குளம் மிகவும் ஆழமானதாகவும்,சரிவான கரை எதுவும் இல்லாமலும் இருந்தது. படிகள் தண்ணீருக்குள் அமைந்திருந்தன. நடக்க முடியாத மனிதன், குளத்தினுள் செல்ல உதவி அவசியம் தேவைப்பட்டது. தண்ணீர் கலங்கும் போது, ''ஒவ்வொருவனும் அவனே செல்லுவான்'' ஆனால் இந்த வியாதியஸ்தனுக்கு வாய்ப்பு இல்லாதிருந்தது.

இந்த மனிதன் இயேசுவின் கேள்விக்கு ''ஆம்'' அல்லது "இல்லை" என்று சொல்வதற்குப் பதில், "அது எனது தவறல்ல, நான் இன்னும் வியாதியாயிருக்கிறேன்! என்னைத் தண்ணீரில் கொண்டுபோய்விட ஆளில்லை" என்று கூறினான். நமக்குப் பிரச்சனைகள் ஏற்படும்போது, அது எப்பொழுதுமே நமது தவறாயிருப்பதில்லை தானே? பெரும்பாலும் நாம், மற்றவர்கள் தான் நம்மை கீழே தள்ளியதாய் நினைக்கின்றோம். ஒரு வேளை இந்த வியாதிஸ்தனைப் போலவே நமக்கும் மனநல சிகிச்சை தேவையாயிருக்கும்.

இயேசு அம்மனிதனை அதோடு விட்டுவிடவில்லை. அவர் பல்முனை சுகத்தைக் கொடுக்க விரும்பினார்: உடல் சுகத்தோடு, மன சுகத்தையும் கொடுக்க விரும்பினார். ''இயேசு அவனை நோக்கி: 'எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட' " என்றார் (வ. 8). முப்பத்தெட்டு வருஷமாக அந்தப் படுக்கை அவனைச் சுமந்தது; இப்பொழுது அவன் படுக்கையைச் சுமக்கும்படி இயேசு கூறினார்.

ஒரு நிமிடம் பொறுங்கள்! இதையே தன்னால் முடியாத காரியமென்று அம்மனிதன் கூறினான். அவனால் நடக்க முடிந்திருந்தால், தண்ணீருக்குள் முதலாவதாக இறங்கி

யிருப்பான். உண்மையில் நடக்க முடிந்திருந்தால் அவன் அக் குளத்தினருகில் இருக்கத் தேவையே இல்லை. இயேசு அவனால் முடியாததைத் செய்யும்படி கூறினார். அவர் அவனிடம், "நடக்க முயற்சி செய்யும் வகையில் குணமாக விரும்புகிறாயா?" என்று அவனிடம் கேட்டார்.

ஒருவகையில் இயேசு அவன் கவனத்தைக் கவர்ந்தார். இயேசு யாரென்றோ, அவரால் குணமளிக்க முடியும் என்றோ அவன் அறியாதிருந்தான். 13ம் வசனத்தில் நாம் பார்க்கப் போகின்றபடி, அவர் இன்னாரென்று அவன் அறியாதிருந்தான். ஆனாலும், அந்த மனிதன் முயற்சி செய்ய முடிவெடுத்தான். "உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்துபோனான்" (வ. 9அ). இயேசு குணமளித்த மற்ற எல்லா சம்பவங்களைப் போலவே இதுவும் உடனடியாய் நடந்தது, முழுமையானதாய் மற்றும் (நாம் காணப் போகிறபடி) நம்பக் கூடியதாய் இருந்தது.

அநேக நாட்களுக்கு எனது உடலின் சில அங்கங்களை அசைக்க முடியாதபடிக்கு நிறைய காயங்களை எனது வாழ்க்கையில் நான் என் சரீரத்தில் பெற்றிருக்கிறேன், அந்தக் குறிப்பிட்ட அங்கத்தின் பயன்பாடற்ற நிலையின் விளைவை நான் அறிந்தவனாய் இருக்கிறேன்: தசைகள் இழப்பு ஏற்படும், இயக்கம் இழக்கப்படும். முப்பத்தெட்டு வருஷம் பயன்படுத் தாமல் இருந்த அம்மனிதனின் சரீர நிலையைக் கற்பனை செய்து பாருங்கள்! இயேசு அவனைக் குணப்படுத்திய போது, அவனது சரீரம் நிறைவடைந்து மறுபடியும் வலுவானதை அங்கிருந்த மற்ற சிலர் கண்டிருக்கக் கூடும்.

இதன்பிறகு யோவான் இந்த சிறு குறிப்பைத் தவழவிடுகிறார்: "அந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது" (வ. 9ஆ). தனது எதிரிகளிடம் ஒரு எதிர்ப்பை உண்டாக்குவதற்காக இயேசு ஓய்வு நாளில் இம்மனிதனைக் குணமாக்கினாரா? ஒரு வேளை அப்படியிருக்கலாம். ஒரு முறை அப்படி அவர் செய் தார் (மத்தேயு 12:1-14). இயேசு ஓய்வுநாளில் குணமாக்கியது ஒரு தற்செயலான நிகழ்ச்சியா? அப்படியுமிருக்கலாம். வேண்டு மென்றோ அல்லது தற்செயலாகவோ இது நடந்திருக்கலாம், இருப்பினும் அது ஓய்வுநாள் என்று நாம் அறியும்படி யோவான் விரும்பினார். ஏனென்றால் இதன்பின் நடந்ததை இக்காரியம் நமக்கு விளக்குகின்றது.

அந்த மனிதன் எழுந்து நின்று நடந்த போது, அக்குளத்தைச் சுற்றிலும் ஏற்பட்ட எழுச்சியுணர்வை எண்ணிப் பாருங்கள். ஆனாலும் அங்கிருந்த சிலர் சந்தோஷம் அடையவில்லை; பரிசேயரும், மற்று சில மதத்தலைவர்களும் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளுபவர்களாயிருந்தனர். அவர்கள் அற்புதம் நடந்ததைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை, மாறாக தங்களது மனித சட்டங்கள் பற்றியே அவர்கள் கவலையாயிருந்தனர். ஆதலால் யூதர்கள் குணமாக்கப்பட்டவனை நோக்கி: ''இது ஓய்வு நாளாயிருக்கிறதே, படுக்கையை எடுத்துக் கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல'' என்றார்கள் (வ. 10). இது கவலைக் குரியதல்லவா? அவர்கள் குணமாக்கப்பட்டதைப் பற்றி ஒன்றும் கூறவில்லை ஒரு மனிதன் முழுமையாக்கப்பட்டதில் அவர்கள் சந்தோஷமடையவில்லை, மாறாக, ''நீ நமது பாரம்பரியச் சட்டங்களில் ஒன்றை மீறிவிட்டாய்'' என்றார்கள்.

''சாபத்'' என்பது ''ஓய்வு'' என்று பொருள்படும். தேவன் இந்த உலகத்தை சிருஷ்டித்தபோது, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் (ஆதி. 2:1-3). பின்னாளில் சாபத் என்னப்பட்ட ஏழாம் நாள் ஓய்வு, பத்துக் கட்டளைகளில் ஒன்றாக ஏற்படுத்தப்பட்டது (யாத். 20:8-11). சாபத் என்பது யூதர்களுக்கு விசேஷித்த நாளாகும். அது ஓய்வு எடுத்து, ஆராதித்து, தேவனைப்பற்றி நினைக்கும் நாளாயிருந்தது, மேலும் அது ஒரு களிகூறும் நாளாகவும் இருந்தது. ஓய்வுநாள் ஆசரிக்கப்படுவதை உறுதிப் படுத்துவதற்காக தேவன், அந்த விதியை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் விதித்தார். எண்ணாகமம் 15ல், ஓய்வுநாளில் விறகு பொறுக்கின ஒரு மனிதன் கல்லால் எறிந்து கொல்லப்பட்டான். நெகேமியாவின் புத்தகத்தில், ஓய்வுநாளில் வியாபாரம் செய்ததற்காக கடும் தண்டனைகள் கொடுக்கப் பட்டது.

தேவனுடைய பிரமாணங்கள் போதிய அளவு கடுமையானதாய் இருந்தபோதிலும் ஜனங்கள் அத்தோடு விட்டுவிட விரும்பவில்லை. பரிசேயர்கள் இந்த ஓய்வுநாள் பிரமாணத்தோடு இருபத்து மூன்று அதிகாரங்களில்

*அடங்கிய விதிகளைச் சேர்த்து இதைப் பெரிதுபடுத்தினர்! அவற்றில் அநேக சட்டங்கள் மதியீனமானதாய் இருந்தன. எடுத்துக் காட்டாக, ஓய்வுநாளில் ஒரு மனிதன் தனது நகத்தைக் கடிக்கக் கூடாது: ஏனெனில் அதுவும் ஒரு வேலையேயாகும். இப்படி மனிதனால் உண்டான சட்டங்கள் பெறும் சுமை களாகவேயிருந்தன. ஓய்வுநாளில் ஒரு மனிதன் செயற்கைப் பல் வைத்துக் கொள்ளலாமா? செயற்கைக் கால் வைத்துக் கொள்ள லாமா? கூடாதா? என்று ரபீக்கள் வாதிட்டனர். ஏனென்றால் அவைகளும் சுமையாகவே கருதப்பட்டன. ஒரு பெண் தனது கணவனின் உடையைத் தைக்கும்போது தவறுதலாக அந்த உடையில் ஊசியைக் குத்தி வைத்து விட்டால், அந்த உடையை ஓய்வு நாளில் அணிந்த கணவன், உடையிலிருந்த ஊசியை சுமந்து பாவம் செய்தவனாகி விடுவான்! (இவைகள் எல்லாம் தேவனால் அல்ல மாறாக, மனிதனால் உண்டான கட்டுப்பாடுகள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்[9]).*

*இவ்வித சட்டங்களில் ஒன்று யோவான் 5ல் நேரடியாகத் தொடர்புபடுத்தப்படுகிறது. ரபீக்கள் கூற்றுப்படி, ஒரு மனிதனை அவனது படுக்கையுடன் சுமந்து செல்லலாம், ஏனெனில் அவ்விடத்தில் படுக்கை சார்புள்ளதாகிறது. ஆனால் மனிதனின்றி ஒரு படுக்கையை மட்டும் ஒருவன் ஓய்வுநாளில் எடுத்துச் செல்லக்கூடாது. ஆனாலும், இயேசு அந்த மனித னிடம் "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட" என்று சொன்னார்.*

*பரிசேயர்கள், "இது ஓய்வு நாளாயிருக்கிறதே, படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல" என்ற போது (வ. 10), அந்த மனிதன், "இது எனது தவறல்ல" என்றான். (அவன் இயேசுவிடம் "நான் நடக்காதது எனது தவறல்ல" என்றான், இப்போது பரிசேயர்களிடம் "நான் நடப்பது எனது தவறல்ல" என்றான்). அவன் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: "என்னைச் சொஸ்தமாக்கினவர், உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடவென்று எனக்குச் சொன்னார்" என்றான் (வ. 11). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "என்னைக் குணப் படுத்தும் அதிகாரம் அவருக்கு உண்டு என்றால், என்னைப் படுக்கையை எடுத்துக்கொண்டு போகும்படி சொல்லும் அதிகாரமும் அவருக்கு உண்டு" என்பதேயாகும்.*

அதற்கு அவர்கள்: "உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடவென்று உன்னுடனே சொன்ன மனுஷன் யார்" என்று அவனிடத்தில் கேட்டார்கள். சொஸ்தமாக்கப்பட்டவன் "அவர் இன்னாரென்று அறியவில்லை; அவ்விடத்தில் ஜனங்கள் கூட்டமாயிருந்தபடியினால் இயேசு விலகியிருந்தார்" (வ. 12-13). முன்பு கூறப்பட்ட உண்மையைக் கவனியுங்கள்: இயேசு யாரென்று அம்மனிதன் அறியாதிருந்தான். இயேசு அவனைக் குணமாக்கினார், பின்பு கூட்டத்தில் மறைந்து போய் விட்டார்.

**ஆத்துமாவில் குணமடைதல் (யோவான் 5:14-16)**

இயேசு இன்னும் அவனை முழுமையாக்கியிருக்கவில்லை. அதற்குப் பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே கண்டு (நிச்சயமாய் அவன் குணமடைந்ததற்கு தேவனிடம் நன்றி செலுத்த அங்கு சென்றிருக்க வேண்டும்) "இதோ நீ சொஸ்த மானாய்[10] அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே" என்றார் (வ. 14). அதிகக் கேடு என் பது ஒருவேளை மிகுந்த சுகவீனத்தைக் குறிப்பதுபோல் தோன் றினாலும், இவ்விடத்தில் இயேசு நரகத்தைப் பற்றித்தான் குறிப்பிட்டிருக்க வேண்டும். வாழ்க்கை எவ்வளவு மோசமான நிலையில் இருப்பினும், அந்நிலையை நித்திய நரகத்தோடு ஒப்பிட்டால் ஒன்றுமில்லை என்றேயாகும்.

அநேக விளக்கவுரையாளர்கள், அம்மனிதன் வாழ்க்கையில் செய்த பாவமே அவனது வியாதிக்குக் காரணம் என்று இயேசுவின் வார்த்தைகள் சுட்டிக் காட்டுவதாகவே எண்ணு கின்றனர். இது உண்மையாயிருக்கிறது. யோவான் 9ல், எல்லா வியாதிகளுமே ஒரு மனிதனின் சொந்த பாவத்தின் விளைவல்ல என்று இயேசு வலியுறுத்தினார், இருப்பினும் சில வியாதிகள் - ஹெச் ஐ வி வைரஸ் மற்றும் எய்ட்ஸ் போன்ற வியாதிகள் - மனிதனின் சொந்த பாவத்தின் விளைவாகவே உள்ளன. ஆனால் இந்த கிருமியைப் பெற்றுள்ள அநேகர் தாங்களே பாலியல் குற்றம் புரிந்ததாலேயே இவைகளைப் பெற்றுள்ளனர்.

அதே வேளையில், மனித வாழ்க்கையில் அவன் செய்யும் பாவத்திற்கும், அவன் உடல் நிலைக்கும் தொடர்பில்லாத நிலைமைகளும் உண்டு. ஒரு வேளை இயேசு அம்மனிதனின் பெரிய பிரச்சனையிலிருந்து மட்டும் அவனை விடுவிக்க

*விரும்பியிருக்கலாம். இயேசுவின் திட்டத்தில் சரீர குணமல்ல ஆத்தும குணமளித்தலே முதலிடம் பெற்றிருந்தது.[11] (எனது நண்பர்களில் ஒருவர்,[12] இயேசு "இனிப் பாவஞ் செய்யாதே" என்றதற்கு பின்வரும் காரணம் இருக்கலாம் என்று என்னிடம் கூறினார்; அதாவது அவன் முப்பத்தெட்டு வருஷமாய்ப் பாவம் செய்யாமலிருந்தான்; அவன் வியாதிப்பட்டிருந்த காலத்தில் செய்திருக்கக் கூடிய - உண்மையில் அவன் செய்யக் கூடாத பல காரியங்களை அவன் நினைத்து, செய்யத் திட்டமிட்டிருக்க லாம், எனவேதான் இயேசு அப்படிக் கூறினார்).*

*"இனிமேல் பாவம் செய்யாதே" என்ற வார்த்தைகளின் மூலம் இயேசு எதை அர்த்தப்படுத்தியிருந்தாலும், ஒரு உண்மை தெளிவாகிறது; இயேசு அந்த மனிதனின் ஆவிக்குரிய நிலையில் அதிக அக்கறையுள்ளவராயிருந்தார். அவன் சரீரத்தில் குணம் பெற்றும், தேவனோடு அவனுக்கு சரியான உறவில்லாமலி ருந்தால், அந்த சரீர சுகம் அற்பமானதாகவே இருந்திருக்கும். இயேசு அம்மனிதனின் சரீரம், மற்றும் மனம் ஆகியவற்றின் மேலும் இவைகளுக்கு மேலாக அவனுடைய ஆத்துமாவின் மேலும் அக்கறையுள்ளவராய் இருந்தார்.*

*வசனம் 15ல் இச்சம்பவம் ஒரு முடிவுக்கு வருகிறது. "அந்த மனுஷன் போய், தன்னைச் சொஸ்தமாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவித்தான்". அந்த மனிதன் இயேசுவைப் பற்றி முன்பு தன்னிடம், "உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட வென்று உன்னுடனே சொன்ன மனுஷன் யார்?" என்று (வ. 12) கேட்ட யூதர்களிடம் இயேசுவைக் குறித்து அநேகம் பேசி யிருக்கலாம். இருப்பினும் அவன் அப்படிப் பேசியிருப்பான் என்று நான் நினைக்கவில்லை. அவனுடைய சாட்சியைக் கவனியுங்கள். அவன் "தன்னைப் படுக்கையை எடுத்துக் கொண்டு நடவென்று சொன்னவர் இயேசு" என்று கூறாமல், "தன்னைச் சொஸ்தமாக்கினவர் இயேசு" என்று கூறினான். அவன் இப்போது இயேசுவை விசுவாசித்தான், அவன் கர்த்தருடைய வல்லமையையும், பிரசன்னத்தையும் நேரடியாக உணர்ந்துகொண்டான். அந்த மனிதனின் சரீரம் மற்றும் மனம் இவைகளோடு அவனது ஆத்துமாவும் குணமடைந்தது.*

*பின்வரும் தலைப்புக் குறிப்போடு யோவான் இச்சம் பவத்தை முடித்தார்: "இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்த*

*படியால், யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலை செய்ய வகைதேடினார்கள்" (வ. 16).*

## இயேசு நம் அனைவரையும் குணமாக்க முடியும்

குளத்தினருகில் இம்மனிதன் குணமாக்கப்பட்ட சம்பவம் இத்துடன் முடிவடைந்தாலும், நமது பாடம் இன்னும் முடிவடையவில்லை. இச்சம்பவத்தின் போது அங்கிருந்த இன்னோரு கூட்டத்தாரைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்று விரும்புகிறேன். பிறகு அச்சிந்தனையில் நம் ஒவ்வொருவரையும் பயன்படுத்த விரும்புகிறேன்.

### பரிசேயருக்கான கேள்வி

யூதத் தலைவர்களை நோக்கிக் கூட இயேசு, "மெய்யாகவே நீங்கள் குணமடைய விரும்புகிறீர்களா?" என்று கேட்டிருக்க முடியும் என்று நீங்கள் சிந்தித்துண்டா? இதைச் சற்று ஆலோசியுங்கள்: அப்போஸ்தலர்களுக்கு அடுத்தபடியாக, வேறு எவரைக் காட்டிலும் யார் இயேசுவின் அற்புதங்களை அதிகமாய் நேரில் கண்டு, அவருடைய போதனைகளைக் கேட்டிருக்கக்கூடும்? வேதபாரகரும் பரிசேயர்களுமே, அவரைச் சிக்க வைக்க, அவர் மீது குற்றம் சுமத்த காரணம் கண்டு பிடிக்க இவர்கள் முயன்றனர். நாம் படித்த இச்சம்பவம் நடப்பதற்குச் சற்று முன்னதாகத்தான் அவர்கள் ஒரு கோதுமை வயலில் ஒளிந்திருந்தனர். இயேசுவின் சீஷர்கள் கதிர்களைக் கொய்து தின்றதின் மூலம் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறியதாகக் குற்றம் சாட்டினர் (மத்தேயு 12:1-2).

இயேசுவால் ஆவிக்குரிய குணம்பெற எல்லா வாய்ப்புகளும் இந்த யூதர்களுக்கு இருந்தன. அநேக வருடங்களாக யூத இனம் மேசியாவின் வருகைக்காகக் காத்திருந்தது,மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களை அவர்கள் அறிவார்கள்; மேசியா எப்படி இருப்பார், அவர் என்ன செய்வார் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியும். இயேசு ஒவ்வொரு தீர்க்கதரிசனத்தையும் நிறைவேற்றினார்.

"மேசியாவின் வருகையை நாங்கள் விரும்புகிறோம்! மேசியா நமது தேசத்தைக் குணப்படுத்த வேண்டும் என்று

நாங்கள் விரும்புகிறோம்" என்று அவர்கள் கூறினர். இயேசு அவர்களிடம், "மெய்யாகவே நீங்கள் குணமடைய விரும்பு கிறீர்களா?" என்று கேட்டிருக்கக் கூடும்.

யோவான் 5ன் கடைசிப் பகுதியில், இயேசு தமது மிகப் பெரிய மூன்று உரிமைகளை விளக்கப்படுத்துகிறார்: (1) அவர் தேவனுக்குச் சமமாய் இருந்தார். (2) அவர் தேவனுடைய கிரியைகளைச் செய்தார். (3) அவர் தேவனுடைய வல்லமை யைப் பெற்றவராயிருந்தார். அவர் ஆவிக்குரிய ஜீவனைத் தந்தார் (வ. 21). அவர் மரித்தோரை உயிர்த்தெழப்பண்ணுவார் (வ. 28-29) மேலும் எல்லா மனுஷரையும் நியாயந்தீர்ப்பார் (வ. 22-23). ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை இரட்சிக்கப் போதுமான சத்தியமும், ஆதாரமும் இந்த உரையாடலில் இருந்தது.

இயேசு அவர்களை நோக்கி, "நீங்கள் உங்கள் ஆவிக்குரிய வியாதிகளிலிருந்து குணமடைய விரும்பவில்லையா?" என்று கேட்டிருக்கலாம். அப்படிக் கேட்டிருந்தால், அவர்கள் பெரும் பாலும்: "ஆம் ... ஆனால் அது எங்கள் பாரம்பரியத்தைத் தள்ளி விடக்கூடாது. மற்றும் எங்கள் மேலான்மைத்தனத்தை அழித்து விடக்கூடாது" என்று பதில் கூறியிருப்பார்கள். "எங்களுக்கு அது தேவைதான் ஆனால் அதற்குரிய விலையைத் தரமாட்டோம்" என்பார்கள்.

**நமக்கு கேள்வி**

நம்மை நோக்கி எழுப்பும் கேள்விக்கு நாம் தயாரா யிருக்கிறோமா? நான் உங்களை எச்சரிக்கிறேன். அது புண் படுத்தக் கூடும்! அது கொட்டக் கூடும்! அது ஆறுதலற்றதாய் இருக்கக் கூடும்! (எனது தகப்பனார் கூறுவதுபோல, அது உங் களைக் காட்டிலும் என்னை அதிகமாய் புண்படுத்தக் கூடும்).

நீங்கள் அதிக எடையுள்ளவராயிருக்கிறீர்களா? மெய்யா கவே நீங்கள் எடை குறைய விரும்புகிறீர்களா? உணவுக் கட்டுப் பாடு மற்றும் உடற்பயிற்சி என்ற விலை செலுத்த நீங்கள் தயாரா? (நம்மைச் சுற்றியுள்ளவர்கள் தங்கள் விருப்பத்திற் கேற்ற உணவை உண்ணும் போது, நாம் மட்டும் அப்படி உண்ணாமலிருந்தால் நம்மை எவ்விதம் புண்படுத்துவதாயி ருக்கும்)!

*இன்றைய நாட்களில் காணும் அநேகரைப்போல் நீங்களும் இக்கட்டில் சிக்கியுள்ளீர்களா? பெரிய வியாதி எதுவுமின்றியே நீங்கள் மோசமாக உணருகிறீர்களா? நீங்கள் நன்றாகவேண்டும் என்று விரும்புகிறீர்களா? தகுந்த உணவு, உடற்பயிற்சி இவற்றுடன், உங்கள் முன்னுரிமைகள் பற்றி மறுபடியும் சிந்தித்து அதன் மூலம் உங்கள் சரீரம், மனம் மற்றும் ஆத்துமா ஓய்வெடுக்க வழிவகுக்கின்றீர்களா? அதாவது நீங்கள் நன்றாயிருக்கத் தக்க விலை கொடுக்க தயாராயிருக்கின்றீர்களா?*

*நீங்கள் யாருடனாவது ஒத்துப்போக முடியவில்லையா? அந்த நபருடன் உறவை மெய்யாகவே நீங்கள் முன்னேற்ற விரும்புகிறீர்களா? அதற்கேற்ற விலை கொடுக்க நீங்கள் தயாரா? உங்கள் கௌரவத்தை விழுங்கிக்கொண்டு நீங்கள், "நான் வருத்தப்படுகிறேன்" என்று சொல்லத் தயாரா? அடுத்தவர் சரியோ தவறோ எது செய்தாலும், நீங்கள் சரியானதை மட்டுமே செய்யுமளவு பெரியவராயிருக்க முடியுமா? நீங்கள் ஒரு ஊழியக்காரனாக (வேலைக்காரனாக) இருக்கக் கற்றுக் கொள்ள முடியுமா?*

*நீங்கள் சிறந்த திருமணம், சந்தோஷமான குடும்பம் இவற்றைப் பெற விரும்புகிறீர்களா? நாம், ஆம் என்றே இதற்குப்பதில் அளிப்போம். ஆனால் இவைகளைப் பெறுவதற்கு நமது பகுதியில் மாற்றங்கள் வேண்டுவது அவசியமாகும் ... மாற்றங்கள் வேதனையை உண்டாக்கும் ... அந்த வேதனையைத் தாங்க நாம் விரும்புவதில்லை.*

*நீங்கள் குற்ற உணர்வால் நிறைந்துள்ளீர்களா? நீங்கள் மெய்யாகவே அந்த உள்ளான வேதனையிலிருந்து விடுபட விரும்புகிறீர்களா? தேவனுடைய பார்வையில் உங்களைத் தாழ்த்தி, அவருடைய சித்தத்திற்கு உங்களை முழுமையாக ஒப்புக்கொடுக்க விரும்புகிறீர்களா? உங்கள் இருதயத்தில் உங்கள் பாவங்களைக் குறித்த வேதனை உண்டாகி, உங்கள் வாழ்க்கைமுறையை மாற்றிக்கொள்ள (வேதம் இதை மனந்திரும்புதல் என்று கூறுகிறது) விரும்புகிறீர்களா? உங்கள் பாவமன்னிப்புக்கென்று நீங்கள் இதுவரை ஞானஸ்நானம் (தண்ணீரில் முழுக்காட்டுதல்) பெறாமலிருந்தால், (அப். 2:38) அதைப் பெற்றுக்கொள்ள நீங்கள் தயாரா? நீங்கள் தேவனுடைய பிள்ளையாயிருந்து பாவம் செய்திருந்தால், தேவனுடைய கிருபையின் முன் நீங்கள் தாழ்ந்து பணியத்தயாரா (1 யோ. 1:9)? உங்கள் செயல்பாடுகள் உங்கள் செல்வாக்கைப்*

*பாதித்திருந்தால், நீங்கள் அதை வெளிப்படையாய் அறிக்கை யிட்டு, புதிதாய் ஆரம்பிக்கத் தயாரா (யாக்கோபு 5:16)? நீங்கள் இவ்விலையைச் செலுத்தத் தயாரா?*

*உங்கள் பிரச்சனை எதுவாயிருப்பினும், நீங்கள் அனு மதித்தால், ஏற்ற விலையைச் செலுத்த விரும்பினால், இயேசு வால் உங்களுக்கு உதவ முடியும். இயேசுவைப் பாருங்கள். சரியானது எதுவோ அதையே செய்யுங்கள். குளத்தின் அருகே இருந்த மனிதன் முயற்சி செய்தபோது, இயேசு, அவன் நின்று, நடக்க வல்லமையைத் தந்தார். உங்களால் முடியாததை அவர் தர முடியும் என்று நம்புங்கள்.*

*இயேசுவால் நமது சரீரங்கள், மனங்கள் மற்றும் ஆத்துமாக் களைக் குணப்படுத்த முடியும்.*

## *முடிவுரை*

*இயேசு எப்பொழுதுமே ஆத்துமாவைப்பற்றி அக்கறை யுள்ளவராயிருக்கிறார். “அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே” (வ. 14). இயேசு இப் பொழுதே நமது ஆத்துமாக்களைக் குணப்படுத்த விரும்பு கிறார். அவர் நம்மை எழுந்து நின்று, அவரோடு நடக்கும்படி அழைக்கிறார். இருப்பினும் நம்மால் நாம் இருக்கும் இடத்தி லேயே இருக்க முடியும். “எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட” என்று கூறியபோது அந்த மனிதன் அதைச் செய்ய வேண்டியிருக்கவில்லை. அவனுக்கு தேர்ந்து கொள்ள வாய்ப்பிருந்தது. அவன் அங்கேயே தொடர்ந்து படுத்துக்கிடந் திருக்கலாம். இறுதியாக மோசமான சூழ்நிலையில் அவன் மரித்திருக்கக்கூடும். அதுபோலவே, இயேசு நம்மை அழைக் கையில் நமக்கு ஒரு சந்தர்ப்பம் உண்டு. நாம் நமது படுக்கை யிலேயே இருந்துகொண்டு, ஒன்றுமே செய்யாமலிருப்பது வசதியாயிருக்கலாம்-ஆனால் அப்படிச் செய்தால் நாம் ஒருக் காலும் முழுமையடைய முடியாது! முடிவெடுத்தல் நம்முடை யதாயுள்ளது.*

*பரிசேயர்களைப்போல் ஆகாமலிருக்க தேவன் நமக்கு உதவுவாராக; நமது பாரம்பரியம், மேலான்மைத்தனம் இவற்றை உதறித்தள்ள அவர் நமக்கு உதவுவாராக! நாம் கர்த்த ருக்கென்று நம்மை ஒப்புக்கொடுப்போம். அவர் நம்மை குணப்படுத்துவார்.*

மெய்யாகவே நீங்கள் குணமடைய விரும்புகிறீர்களா? உங்கள் பதில்செயல் உங்கள் பதிலைச் சுட்டிக் காட்டும்.

குறிப்புகள்

[1]சில பிரதிகளில் இது ''பண்டிகை'' என்றுள்ளது, இது சரியானதென்றால் ''பண்டிகை'' என்பது பஸ்கா பண்டிகையையே குறிக்கின்றது. [2]சிலர், "இயேசு சபைக்குச் செல்ல விரும்பினார்" என்பர். [3]KJVயில் "ஆட்டுச் சந்தை" என்றுள்ளது. [4]இவைகள் ''மண்டபங்கள்'' என்று KJVயில் அழைக்கப்படுகின்றன. [5]இவ்வார்த்தைகள் பகுதியாகவோ, முழுமையாகவோ பல பழைய பிரதிகளில் காணப்படுகின்றன, ஆனால் மிகப் பழைய சிறந்த பிரதிகளில் இவை இல்லை. [6]குறைந்தபட்சம், அவனோடு பகலில் தங்கியிருக்க அவனுக்கு நண்பர்கள் யாருமில்லை (வ. 7) குளத்தினருகே செல்ல ஒவ்வொரு நாளும் யாரேனும் ஒருவர் உதவியிருக்கக் கூடும். [7]இயேசு இவைகளைப் பேசும் போது, அங்கிருந்த கூட்டத் தையும், ஒரு வேளை அவரைக் குற்றம் கண்டுபிடிப்போரையும் தன் மனதில் வைத்துப் பேசியிருக்கலாம். [8]இம்மனிதனின் பதிலில் இருந்து, தண்ணீர் "கலங்கும்போது" அது குணமளிக்கும் வல்லைமையைப்பற்றிய மூட நம்பிக்கையை அது சுட்டிக் காட்டுவதை அறியலாம். யோவான் 5:3 ஆ, 4 ஆகியவை KJVயில் நல்ல விளக்கமாய் அமைந்துள்ளன. [9]பழைய ஏற்பாடு, சுமைகளைச் சுமந்து செல்லாதே என்று சொல்லியது (எரேமியா 17:19-27; நெகேமியா 13:15-19). ஆனால் நெகேமியா 13:15ல், சாபத் அன்று வியாபாரம் செய்வதைப்பற்றியே இது குறிப்பது மிகத் தெளிவாகிறது. [10]இங்கு பயனாகியுள்ள வினைச் சொல் ஒரு நிரந்தர நிலையைக் குறிக்கிறது. [11]"இயேசுவே பதில்" கட்டுரையில் பார்க்கவும். [12]டேவிட் டென்மேன்.